**தனமல்வில பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தனமல்வில பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்குச் சொந்தமான 95 மயான நிலங்கள் மற்றும் மொரகெட்டிய சந்தியில் அமைந்துள்ள கடையுடன் கூடிய காணி என்பன மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வர வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட மயான நிலங்களின் உரித்தை கையேற்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் உரிய காணி அதிகாரத் தரப்பினருக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மொரகெட்டிய சந்தி கடை உரித்து தொடர்பாக பிரச்சினையான நிலைமை ஒன்று தோன்றி இருந்ததுடன் அதனைத் தீர்த்து வைப்பதற்கு செவனகல பிரதேச செயலாளருடன் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 85,685 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த ஆதனங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படும். |
| (iii) | தற்காலிக மதிப்பீட்டின் பிரகாரம் செவனகல பிரதேச சபை உப அலுவலக கட்டிடத்தின் பெறுமதி ரூபா 8,280,000 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 828,000 ஆக ரூபா 7,452,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த ஆதனங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,675,403,002 தொகையான 03 சொத்து விடயங்களுக்குரிய உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் முறையான நிலையான சொத்துப் பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரித்தை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களுக்கு கோரிக்கை விடப்பட்டிருந்ததுடன் இதுவரையில் 04 ஆதனங்கள் தொடர்பாக உரித்தை கையளித்தல் பெறப்பட்டுள்ளது. உரித்து கிடைக்கின்ற சகல ஆதனங்களுக்காகவும் அந்த சந்தர்ப்பத்தின் போதே பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டதுடன் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாத இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்து பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படும். தளபாடம் மற்றும் பொருத்திகள் தொடர்பாக குழுவொன்றை |

நியமித்து பெறப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் பதிவேடுகளுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| | 147(i) ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள அல்லது அந்த சபை அங்கீகரித்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஹோட்டல் மற்றும் தங்குமிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வென்று மேற்கொள்ளப்படவில்லை | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தில் இதில் குறிப்பிடப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்துள்ள ஹோட்டல் தொடர்பாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அறிக்கையொன்று பெறப்பட்டு வரி அறவிடப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற 16 | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | பழைய நிலுவை ஊழியர் கடன் மீதி தொடர்பாக உரிய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 103,689 தொகையான ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை. | எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தருக்கு கட்டளையிடுமாறு அறிவிக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,363,166 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,231,264 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 60,000 | 35,000 | 35,000 | - | 60,000 | 51,620 | 51,620 | - |
| (ii) | வாடகை | 14,197,600 | 14,082,261 | 13,648,561 | 433,700 | 11,626,300 | 11,627,700 | 11,564,600 | 63,100 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,697,715 | 2,031,502 | 2,031,502 | - | 1,426,523 | 1,718,949 | 1,718,949 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,627,443 | 17,032,249 | 4,201,336 | 12,830,913 | 13,292,038 | 22,468,761 | 10,506,206 | 11,962,554 |
| | மொத்தம் | 32,582,758 | 33,181,012 | 19,916,399 | 13,264,613 | 26,404,861 | 35,867,030 | 23,841,375 | 12,025,654 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 33,181,012 தொகையான மொத்த வருமானத்தில் | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் நிலுவை வாடகை தற்போது அறவிடப்பட்டுள்ளது. ஏனைய வருமானமாக நிலுவையாகக் |

| | | |
|---|---|---|
| ஆண்டின் இறுதிவரையில் ரூபா 13,264,613 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 34 சதவீதம் ஆகும். | | காணப்பட்ட ரூபா 12,830,913 தொகையிலிருந்து இதுவரையில் ரூபா 8,333,711 தொகை அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை முன்னரே இனங்கண்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | உரிய பிரதேசங்களை வரைபடமாக்குதல் தொடர்பாக மொனறாகலை உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் உதவி கோரி அறிவிக்கப்படும். |

### 2.2.4 வாகனத்தை வாடகைக்கு விடல் வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய வீதிச் செப்பனிடுகள், மோட்டார் கிறேடர் இயந்திரம் மற்றும் டிப்பர் வண்டி என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 1,276,072 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | அறவிடப்படாதுள்ள சகல பணத்தையும் அறவிடுவதற்காக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவிக்கப்படும். |

### 2.2.5 நீர்க் கட்டண வருமானம் அறவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 666,845 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 396,855 தொகை அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,030,897 தொகையான நீதிமன்றத் தண்டப்பணமும், ரூபா 11,252,057 தொகையான முத்திரைக் கட்டணமும் அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தில் இருந்து ரூபா 7,663,946 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதித் தொகையை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 87,749 தொகையொன்று அறவிட வேண்டியிருந்தது. | மிகைக் கட்டண பணம் அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரியதாகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டில் அடைந்து கொள்வதற்குத் தேவையான நோக்கங்கள் மற்றும் அமுல்படுத்தவதற்கு எதிர்பார்த்த பணிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதனால் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்யும் இயலுமை இழக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்படும். |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக பதவியணியினருக்கு தெளிவுபடுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று ஒழுங்கமைக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரித்தற்ற தனியார் கட்டிடத்தில் சபையின் ஊழியர் அல்லாதவர்கள் நடாத்திச் செல்வதற்காக 15 நூலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 552,437 பெறுமதியான 3050 புத்தகங்கள் மற்றும் ரூபா 210,000 பெறுமதியான 28 புத்தக இறாக்கைகள் என்பவற்றை மீள சபைக்குச் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே நூலகங்களும் தற்போது செயற்படு நிலையில் காணப்படவில்லை. | நூலகங்களை செயற்படு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நூலகங்களை செயற்படு நிலைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பதவியணியினர் வெற்றிடம் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சபையில் 06 பதவிகளில் 09 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | இந்த பதவிகளை நிரப்புதல் தொடர்பான பொறுப்பு ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சினதாகும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை பயன்படுத்தப்படுகின்ற 02 வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | ஒரு வாகனத்தை சபைக்கு கையளிக்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு வாகனத்தின் உரித்தை இந்த ஆண்டில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீடு தயாரிக்கும் போது பெறுகைத் திட்டமொன்றை உள்ளடக்குமாறு அறிவிக்கப்படும். |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 200 கனமீற்றருக்கு அதிக அளவில் கிறவல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 12 வீதிச் செயற்திட்டங்களின் போக்குவரத்து விடயத்திற்காக செலுத்தும் போது கிறவல் 200 கனமீற்றருக்கு மேற்பட்ட அளவில் கொடுப்பனவு அளவு விலை வீதம் பயன்படுத்தப்படாமல் 200 கன மீற்றருக்கு குறைந்த விலை வீதம் பயன்படுத்தப்பட்டு செலுத்தப்பட்டமையால் ரூபா 2,035,684 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அவரிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனை கோரப்பட்டிருந்ததுடன், அவரால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் குழுவின் மூலம் தொழில்நுட்ப அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபை வாடகைக்குப் பெற்ற 02 பெகோ லோடர் இயந்திரங்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட 04 மயான நிலங்களைத் தயாரிக்கும் வேலைகளின் போது அந்த 02 பெகோ லோடர் இயந்திரங்களுக்காக குறித்த மணித்தியால எண்ணிக்கையை விட 40.9 மணித்தியாலங்களுக்கு ரூபா 96,240 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அவரிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனை கோரப்பட்டிருந்ததுடன், அவரால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் குழுவின் மூலம் தொழில்நுட்ப அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் நிறைவேற்றப்பட்ட வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் 03 செயற்திட்டங்களுக்குரிய அளவிடைப் பத்திரம் மற்றும் பூர்த்தி வேலை அறிக்கையின் பிரகாரம் வீதியின் உயரம் 6 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் வீதியின் பௌதீக பரிசோதனையின் போது 5 அங்குலமாக இருந்தமையால் கூட்டுமொத்தமாக ரூபா 407,494 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக வீதி எதிர்பார்த்த நிலையில் நிர்மாணிக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அவரிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனை கோரப்பட்டிருந்ததுடன், அவரால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் குழுவின் மூலம் தொழில்நுட்ப அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | சபையினால் நிறைவேற்றப்பட்ட வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் 03 செயற்திட்டங்களுக்குரியதாக நிறைவேற்றப்படாதிருந்த விரிவுபடுத்தும் தாங்கி (Span Joint) வேலை விடயத்திற்காக கூட்டுமொத்தமாக ரூபா 20,832 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அவரிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனை கோரப்பட்டிருந்ததுடன், அவரால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் குழுவின் மூலம் தொழில்நுட்ப அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பிரதேச சபை தயாரித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும், ஆண்டின் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த | சாத்தியமான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகள் அடையப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் பாதீட்டு முரண்களை குறைத்து சரியான பாதீட்டு கட்டுப்பாட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

போது 04 வருமான விடயங்களில் 20 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையும், 06 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 931 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்படும். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட வேண்டும். | மொனறாகலை உதவி உள்ளூராட்சி ஆணையாளருடன் கலந்துரையாடி முகாமைத்துவக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |